# வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம்

## North East Secretariat On Human Rights

# நிசோரின்
# மனித உரிமை கல்வி

*செப்டம்பர் 2005*

கரடிப்போக்கு சந்தி
கிளிநொச்சி
தொ.பே.இல 021 2285986

Karadippokku Junction
Kilinochchi
Email : nesohr@hotmail.com
Website: www.nesohr.org

## 1. நிசோர் என்பது யாது?

தமிழீழ மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்க்கு ஒரு தேசிய மனித உரிமை அமைப்பாக நிசோர் உருப்பெற்றது. நிசோர் 2004 ம் ஆண்டு யூலை மாதம் 09 ம் திகதி கிளிநொச்சியிலுள்ள கரடிப்போக்கில் தனக்கெனச் சொந்தமான புதிய கட்டிடத்தில் ஆரம்பித்தது. போர்க்காலத்தில் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொதுச்சேவைகள் எல்லாம் செயலிழந்து காணப்பட்ட நேரத்தில் இதை நிவர்த்தி செய்ய உருவாகிய பிரஜைகள்

*சர்வதேச மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10* ***2004***




*காலஞ் சென்ற நிசோர் உறுப்பினர் சந்திரநேருவின் பேச்சும் கலந்துரையாடலும்.*

குழுக்களின் தொடர்ச்சியாகவே நிசோர் உருவெடுத்தது. முந்திய பிரஜைகள் குழுக்களில் முழு முயற்ச்சியோடு வேலை செய்தவர்களே நிசோரின் நிர்வாக அங்கத்தவர்களாக கடமையாற்றுகின்றார்கள். தற்சமயத்தில் கிளிநொச்சியிலுள்ள தலமை அலுவலகத்தில் 7 முழுநேர அலுவலர்களுடன் இது இயங்குகின்றது. பொதுமக்களிடமிருந்து மனித உரிமை மீறல் முறைப்பாடுகளை ஏற்று அதற்க்கு நியாயமான தீர்வை காண முயற்ச்சிக்கின்றது.

நிசோர் தனக்கென மூன்று பிரதான நோக்கங்களை வரையறுத்ததுள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், வடகிழக்கிலுள்ள மக்களுக்கு மனித உரிமைகள் பற்றி அறிவூட்டலும், மனித உரிமை சம்பந்தமான சந்தேகங்களுக்கு ஒரு தேர்ந்த அறிவுரை வழங்குதலுமே இம்மூன்று நோக்கங்கள்.

## 2. என்றும் இருந்த மனித உரிமைகள்

மனிதன் கூட்டாக சேர்ந்து வாழத்தொடங்கிய காலம் தொடக்கம் அந்தச் சமூகத்து அங்கத்தவர்களுக்கு உரிமைகள் இருந்துதான் வந்தது. முந்திய காலங்களில் சமுதாயத்திலுள்ள வெவ்வேறு பிரிவினர்களுக்கு வெவ்வெறு உரிமைகளும் கடமைகளும் இருந்து வந்தது. ஆனால் இவ்வுரிமைகள் மானுடர் யாவரும் சமம் என்ற கருத்தை மையமாக கொணடிருக்கவில்லை. மாறாக மனிதரை வெவ்வேறு தளங்களில் பிரித்தே ஒவ்வொரு தளங்களில் உள்ளவர்களுக்கும் வெவ்வேறு உரிமைகளையும் கடமைகளையும் கொடுத்திருந்தது. எந்தவொரு சமூகத்திலும் கொடுக்கப்பட்ட உரிமைகள் அச்சமூக கட்டமைப்பு நிலைத்து நிற்பதற்கு ஏதுவானதாக இருந்திருக்கின்றது. அது போவவே முதலாளித்துவ சமூகம் நிலைத்து நிற்கவே ஐ.நாவின் சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் ஏதுவாக இருக்கிறது என்கிறார் சிலர். இது பற்றி நீங்கள் சிந்தித்து, கலந்துரையாடிப் பாருங்கள்.

1948 இல் ஐ.நா சபை சர்வதேச மனித உரிமை சாசனத்தை பிரகடனம் செய்தது. இன்று இது “UDHR” என்று அழைக்கப்படும் மிக பிரபல்யமான சாசனமாக உள்ளது. மானிடர் யாவரும் சமமானவர்கள் என்ற கருத்துக்கு ஒரு புதிய வேகத்தை இம்மனித உரிமைப் பிரகடனம் கொடுத்தது. உலகளாவிய ரீதியில் முதன் முதலாக இச் சாசனம் மானிடர் யாவரும் சமத்துவமானவர்கள் என்ற கொள்கையை பரப்பியது. இதுவே இச்சாசனத்தின் மிக முக்கியமான வெற்றியாகும். இச்சாசனம் 30 சிறிய உறுப்புரைகளில் பல மனித உரிமைகளைப் பற்றி விளக்கம் கூறுகின்றது. இவ்விளக்கங்கள் எல்லாம் மானிடர் யாவரும் சமத்துவம் ஆனவர்கள் என்ற ஒரு வசனத்தின் கருத்துக்குள் அடங்கும். இவ்வசனத்துடனேயே இச் சாசனம் ஆரம்பிக்கின்றது.

இது 300 மொழிகளில் இன்று மொழி பெயர்க்கப் பட்டு உலகிலே மிக அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்ட ஒரு ஆவணமாக திகழ்கின்றது.

## 3. சர்வதேச மனித உரிமை சாசனங்கள்

ஐக்கிய நாடுகள் சபையினால் மேலும் தொகுக்கப்பட்ட மனித உரிமை சாசனங்கள் சர்வதேச மனித உரிமைக்கட்டமைப்பை மேலும் விரிவு படுத்தியது. சர்வதேச மனித உரிமைப்

பிரகடனத்தின் முதல் விரிவாக்கம் தான் குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தமும் பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தமும். குறிப்பாக குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் தனிமனித உரிமைகள் பற்றியும், பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் ஒப்பந்தம் சமூக உரிமைகள் பற்றியும் விளக்குகிறது. இச்சாசனங்களை, உலகில் அவ்வக்காலத்தில் நடைபெற்று வரும் மோசமான மனித உரிமை மீறல்களை அவதானித்து ஐநா சபை மேலும் விரிவுபடுத்தியது. பார்க்கப் போனால் இவை எல்லாம் தனிமனித உரிமைகளையே விரிவு படுத்தி இருக்கிறது. இவைகளுள் முக்கியமான சிலவற்றை கீழுள்ள அட்டவணையில் காணலாம்.

<table>
<tr><td colspan="3">ஐநா மனித உரிமை பிரகடனம்</td></tr>
<tr><td>குடியியல் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம்</td><td colspan="2">பொருளாதார சமூக, பண்பாட்டு உரிமைகள் ஒப்பந்தம்</td></tr>
<tr><td>பெண்களுக்கு எதிரான எல்லாவித பாராபட்சத்தையும் ஒழிக்க ஒப்பந்தம்</td><td>சிறுவர் உரிமை ஒப்பந்தம்</td><td>சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தம்</td></tr>
</table>

## 4. சர்வதேச மனித உரிமை பிரகடனம். (1948)

உறுப்புரை 1-2 யாவரும் சமம். யாவருக்கும் இவ்வுரிமைகள் உண்டு.

உறுப்புரை 3 உயிர் வாழும் உரிமை என்ற அடிப்படை உரிமையை கூறி உறுப்புரை 4-21 வரை குடியியல் அரசியல் உரிமைகளை விரிவு படுத்துகிறது.

| | |
|---|---|
| உறுப்புரை 4-6 | பாதுகாப்பு, அடிமைபடுத்தப் படாத, சித்திரவதைக்கு உள்படுத்தப் படாத, எங்கும் தனி மனிதனாக அடையாளப் படுத்தப் படும் உரிமைகள். |
| உறுப்புரை 7-11 | சட்டத்தின் முன் சமமாக மதிக்கப் படும் உரிமை. |
| உறுப்புரை 12 | தன், தனது குடும்பம், தனது வீடு, தனது பிரத்தியேக கடிதத் தொடர்பு இவைகளில் தேவையில்லாத தலையீடுகள் இல்லாமல் இருக்கும் உரிமை. |
| உறுப்புரை 13-14 | எங்கும் செல்லும் உரிமை. |
| உறுப்புரை 15-16 | பிரஜா உரிமை, திருமணம் செய்ய, செய்யாமலிருக்க உரிமை, |
| உறுப்புரை 17 | சொந்தமாகவும், மற்றையவருடன் சேர்ந்தும் உடைமைகள் வைத்திருக்கும் உரிமை. |
| உறுப்புரை 18-20 | பேச்சு, கருத்து ஒன்று சேரும் சுதந்திரம். |
| உறுப்புரை 21 | அரசியலுரிமை |

உறுப்புரை 22 சமூக பாதுகாப்பு என்ற அடிப்படை உரிமையை கூறி உறுப்புரை 4-21 வரை பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளை விரிவு படுத்துகிறது.

| | |
|---|---|
| உறுப்புரை 23-24 | வேலை செய்யவும், ஒரே வேலைக்கு ஒரே சம்பளம் வாங்கவும், தொழிலாளர் சங்கங்கள் அமைக்கவும், போதிய ஓய்வுக்கும் உரிமை. |
| உறுப்புரை 25 | போதிய வாழ்வு வசதி: உணவு, உடை, வீடு, சுகாதார வசதி |
| உறுப்புரை 26 | கல்வி உரிமை. |
| உறுப்புரை 27 | தனது கலாசாரத்தை பின்பற்றும் உரிமை. |

## 5. மனித உரிமை பாதுகாப்பும் மேம்பாடும்

மனித உரிமை என்றால் என்ன என்று தெரிந்து கொண்டால் மட்டும் மனித உரிமை மீறல்களை அழித்துவிட முடியாது. மனித உரிமை மீறல்கள் மிக அதிகமாக அதிகாரம் உள்ள பகுதியினரால் அதிகாரம் இல்லாத பகுதியினர் மேலே இழைக்கப்படுகின்றது. நாட்டின் அரசாங்கமும், அதன் ஆயுதப் படைகளும் மிக அதிகாரம் படைத்தவாகள். இப்பகுதியே மிக அதிகமான மனித உரிமை மீறல்களைச் செய்கிறது.




ஒரு நீதியான அரசாங்கம் நியாயமான சட்டங்களைச் செய்து அதை தன் நீதி மன்றத்தின் மூலம் அமுல் செய்ய வேண்டும். ‘‘நாட்டின் சட்டத்தையும் அதன் அமுலாக்கத்தையும், பரிசீலித்து அவை ஏன் நீதியை நாட்டத் தவறுகின்றன என்பதைப் பற்றி ஆராய்ந்து பாருங்கள்.’’ உலகில் மனித உரிமை ஏன் மீறப்படுகின்றது என்பதையும் மக்கள் ஏன் சமத்துவம் அற்று வாழ்கின்றார்கள் என்பதையும் விளக்குவதற்க்கு மேற்க்கூறப்பட்ட சட்ட ரீதியான விளக்கம் அவசியம்.

## 6. இன்று நமது மக்களை பாதிக்கும் முக்கியமான சில மனித உரிமைள்.

### 6.1 பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் ஒப்பந்தத்தில் முதலாவது உறுப்புரை

*'எல்லா மக்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு. அதனூடாக அவர்களுக்கு தங்கள் அரசியல் முறையை நிலை நாட்டி, பொருளாதார சமூக பண்பாட்டு வளர்ச்சியை முன்னெடுக்க உரிமை உண்டு.'*

1. இங்கு மக்கள் என சொல்லப்படுபர் யார்?
2. வடகிழக்கில் வாழ்ந்துவரும் தமிழர் ஒரு மக்களா?
3. இவர்களுக்கு மொழி, கலாசாரம், நீண்ட சரித்திரம், நிலம், காலனித்துவத்திற்கு முன்பு அரசாங்கம் ஆகிய தனித்துவமான அடையாளங்கள் உண்டா?
4. இச்சுய நிர்னய உரிமையை மீணடெடுக்கக் கேட்ட போது இம்மக்களின் தனிமனித உரிமைகளும், சமூக உரிமைகளும் இலங்கை அரசால் கொடூரமாக தாக்கப் பட்டது உண்மையா?
5. இம்மக்கள் சுய நிர்ணய உரிமையை மீட்க எடுத்த போராட்டத்தின் வளர்ச்சியாக இன்று இம்மக்கள், சட்டம், காவல்துறை, திட்டமிடல், சூழல்பாதுகாப்பு, ஆகிய அமைப்புக்களை கொண்ட ஒரு தனி அரசு நடத்துவது உண்மையா?
6. இம்மக்களின் நிலம் இலங்கை அரச படைகளினால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது உண்மையா?
7. மேற் சொன்ன உறுப்புரை உரிமையை இம்மக்கள் இழந்திருக்கிறார்களா?

மனித உரிமைகளை மென்மேலும் மேம்படுத்த எப்போதும் இடமுண்டு. ஆனால் சுயநிர்ணய உரிமை இல்லாமல் ஒரு மக்கள் வேறு ஒரு உரிமையும் உறுதியாக நிலை நாட்டவும் முடியாது மேம்படுத்தவும் முடியாது.

## 6.2 ச.தே.ம.உ பிரகடனத்தில் உறுப்புரை 17 உடைமை உரிமை

இம்மக்கள் தனியாகவும், சமூகமாகவும் தங்கள் காணி உரிமைகைளை மிக அதிகமாக அளவில் பல வழிகளில் இழந்திருக்கிறார்கள்.

- திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் இராணுவத்தின் பலத்தோடு தமிழரின் காணிகள் ஏராளமாக அபகரிக்கப் பட்டுள்ளது.
- இன்று வடகிழக்கில் மக்களை பலவந்தமாக வெளியேற்றி அவர்களின் காணிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

## 6.3 உறுப்புரை 4 - பாதுகாப்பு உரிமை

பயங்கரவாத தடைச் சட்டமும் அவசரகாலச் சட்டமும் சேர்ந்து இராணுவத்திற்கு கொடுத்துள்ள அளவுக்கு மீறிய அதிகாரத்தால் அது மக்களின் பாதுகாப்பை மிகவும் பயங்கரமாக பாதிக்கிறது. அச்சட்டம் அச்சுறுத்தும் உரிமைகள்:

- உயிர் வாழும் உரிமை
- காரணமற்ற கைதுகள்
- காணாமல் போவது
- சித்திரவதை

இவ்வுரிமைகளுக்கு எல்லாம் இவ்விரு சட்டங்களும் ஆபத்தை உண்டாக்குகிறது.

## 6.4. சட்டத்தின் முன் சம உரிமை - உறுப்புரை 7-11

இம்மக்கள் இவ்வுரிமையை இழந்ததால் அவர்கள் மேல் மீறப்பட்ட உரிமைகளுக்கு எவரும் தண்டிக்கப் படவில்லை.

## 6.5. கலாசார உரிமை - உறுப்புரை 27

- இம்மக்கள் மொழியுரிமை இழந்திருக்கிறார்கள்.

- கோவில், தேவாலயங்களை இராணுவம் ஆக்கிரமித்து உள்ளமையால் சமய உரிமையையும் இழந்து இருக்கிறார்கள்.

## 8. சிறுவர் உரிமைகள் பற்றிய ஐ.நா ஒப்பந்தம்.

இவ்வொப்பந்தத்தில் 42 உறுப்புரைகளில் எட்டு பரந்த விடயங்கள் பற்றி கூறுகிறது. இவையாவன சமத்துவம், அடையாளம், கல்வி, பாதுகாப்பு, குடும்பம், விடுதலை, விசேட தேவைகள், சிறுவரும் சட்டமும் ஆகும்.

**உங்கள் சமூகத்தில் சிறுவர் உரிமைகள்.**

உங்கள் சமூகத்தில் மீறப்படும் சிறுவர் உரிமைகளை வரிசைப்படுத்துங்கள் இவ்வுரிமைகள் சிறுவரின் முழுவளர்ச்சியைப் பாதிக்கின்றதா?

- சிறுவர் தொழிலாளர்
- சிறுவர் பாலியல்த் துர்ப்பிரயோகம்
- சிறுவர் கொடுமைப்படுத்தல்
- சிறுவர் போராளிகள்



உங்கள் சமூகத்தில் எந்த உரிமைகள் மிக அதிகமாக மீறப்படுகின்றன?

சர்வதேச மட்டத்தில் எந்த உரிமைகள் அதிகமாக பேசப்படுகிறது?

சிறுவர் போராளிகள்

சிறுவர் உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் ஆயுதப் போராட்டங்களில் உள்ள சிறுவர் பற்றி எதுவும் கூறவில்லை. இவ்வொப்பந்தத்தின் 38 ஆவது உறுப்புரையில் ஆயதப் படைகளுக்கு 15 வயதுக்கு குறைந்த சிறுவர்களை எடுக்கக் கூடாது என்று மட்டும் கூறுகின்றது.

ஆனால் 2000 ம் அண்டு ஐ.நா வால் வெளியிடப்பட்ட சிறுவர் உரிமை ஒப்பந்தத்தோடு சேர்ந்த ஒரு 'கட்டாயமற்ற மூலக்குறிப்பீட்டில்', ஆயுதப்போராட்டத்தின் மத்தியிலுள்ள சிறுவர் உரிமைகளை விபரிக்கின்றது.

இக்குறிப்பீட்டில் கூட ஒரு நாட்டின் அரசு 18 வயதிற்க்குட்ப்பட்ட சிறுவரை ஆயுதப்படைகளில் சேர்ப்பதை சிறுவர் உரிமை மீறலாகச் சொல்லப்படவில்லை. (உறுப்புரை 1,2,3) ஒரு அரசு 18 வயதிற்க்குட்ப்பட்டோரை போருக்கு அனுப்புமேயானால் அது சிறுவரின் உரிமை மீறலாக இக்குறிப்பீடு சொல்கிறது.
(உறுப்புரை 1)

இதே நேரத்தில் நாடாக அங்கிகரிக்கப்படாத ஆயதக் குழுக்கள் 18 வயதிற்க்கு குறைந்தவரை தன் இயக்கத்தில்ச் சேர்ப்பதை இக்குறிப்பீடு சிறுவர் உரிமை மீறலாக சொல்கிறது. (உறுப்புரை 4) இது 15,16,17 வயது உள்ளவர்களை போர் அல்லாத வேறு சேவைகளில் இவ்வியக்கங்கள் ஈடுபடுத்தினாலும் அது சிறுவர் உரிமை மீறலாக கூறுகிறது.

தமிழீழத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது ஒரு ஆயுதக்குழுவா அல்லது அரசா அல்லது உருவாகிவரும் ஒரு அரசா அல்லது அல்லாது வேறு ஏதேனும் ஒன்றா? மேற்கூறிய மூலக்குறிப்பீடு இங்கு பொருந்துமா?

விடுதலைப் புலிகள் 18 வயதிற்குட்பட்டோரை தம் அமைப்பில்ச் சேர்ப்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

## 9. பெண்கள் உரிமைகள் பற்றிய ஐநாவின் ஒப்பந்தம்

- அரசியலில் பங்கு பற்றும் உரிமை
- சர்வதேச மட்டத்தில் நாட்டை பிரதிநிதித்துவப் படுத்த உரிமை
- பொருளாதார சமூக வாழ்வுரிமை
- சட்டத்தின் முன் சமத்துவ உரிமை
- குடும்ப உறவுகளில் சமத்துவ உரிமை

## 10. சமூத்திலுள்ள பாகுபாடுகளால் மீறப்படும் ஒரு உரிமை.

பாலியல் தொங்தரவு: வீதிகளில், அலுவலகத்தில்

பாலியல் வன்முறை:

சிறுவர்-இருபாலாரும் பாலியல் துஷ்பிரயோகம்

இப்பாதுகாப்பு உரிமை மீறலை கடிந்து பேசாதவர் அருமை. இருப்பினும் இது பரவலாக மீறப்பட்டு வருகிறது. இதற்கான காரணங்கள் என்ன?

- இது ஒரு பாரிய குற்றம் என்பதை சமூகம் ஏற்றுக் கொள்ளாமை.
- இதனால் பாதிக்கப் பட்டோர் இதுபற்றி சொல்ல விரும்பாமை. ஏன்? சமூகம் பாதிக்கப் பட்டோரையே குறைவாக பார்ப்பது. குற்றவாளி பெரும்பாலானோர் அதிகாரமுள்ளவர்கள் ஆதலால் அவர் மேல் உள்ள பயமும் காரணம்.
- சொன்ன சந்தர்ப்பங்களிலும் குற்றவாளி தப்பித்துக் கொள்ள பல அதிகாரமுள்ளோர் உதவ வருகின்றனர். அப்போது இது எல்லோரும் செய்யும் ஒரு செயல் என்று இதற்கு பரிங்துரைப்பது.





நன்றி பெண்கள் அபிவிருத்தி மையம்